மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

இ.ம.எண்.714/2018 இன் அ.வ.எண்.949/1989

எ.ம.சா.2

02.02.2019 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமானத்தின்பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை நான் வாதியின் சகோதரரின் மகன் என்றால் சரிதான். வாதி பழனியாண்டவர் நகரில் தனி வீட்டிலும், நான் சண்முகபுரத்தில் தனி வீட்டிலும் குடியிருக்கிறோம். வேலுச்சாமிக்கவுண்டர் இறக்கும்போது என் வீட்டில்தான் குடியிருந்தார். வேலுச்சாமிக்கவுண்டர் மனைவி இறந்தபின்பு அவர் என்னுடைய வீட்டில்தான் இருந்தார். நான்தான் அவரை பராமரித்து வந்தேன். வேலுச்சாமிக்கவுண்டரின் மனைவி உயிருடன் இருக்கும்வரை அவர் தனிக்குடும்பமாகத்தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். வேலுச்சாமிக்கவுண்டர் இறப்பதற்கு 18 நாட்களுக்கு முன்பாக அவருடைய மனைவி இறந்தார் என்றால் சரிதான். வேலுச்சாமிகவுண்டர் உயிருடன் இருக்கும்வரை நான் எந்தக்காலத்திலும் பராமரிக்கவும், பாதுகாப்பு அளிக்கவும் இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வேலுச்சாமிக்கவுண்டர் உயில் எழுதிவைத்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் வேலுச்சாமிக்கவுண்டர் இறந்து 3 நாட்கள் கழித்து கோகிலத்தம்மாள் சொல்லி எனக்கு தெரியும். உயிலில் சொல்லப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது. இதுநாள்வரை நான் அசல் உயிலை பார்த்தது இல்ல. ஆனால் எதிர்மனுதாரர்கள் தரப்பில் உயில் ஜெராக்ஸ் நகல் என்னிடம் காட்டப்பட்டது. நான் ஜெராக்ஸ் நகலை பார்த்தபின்புதான் உயில் மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். நான் பார்வையிட்ட ஜெராக்ஸ் உயில் ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதன் அடிப்பையில் உயில் மோசடியானது என நான் சொல்கிறேன் என்பதை என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றாலல் சரியல்ல. சொல்லியுள்ளேன். எதனால் உயில் மோசடியானது என்று சொல்கிறேன் என்றால் என்னுடைய அப்பாவும், வேலுச்சாமி கவுண்டரும் பாகப்பிரிவவினை செய்துகொண்ட சொத்தை உயிலில் எனது அப்பாவின் பங்கையும் சேர்த்து எழுதியுள்ளதால் உயில் மோசடியானது என்று நான் சொல்கிறேன். சொத்து விபரத்தில் குறைபாடு உள்ளது என்பதால் மட்டும் உயில் மோசடியானது என்று சொல்கிறேனா என்றால் இல்லை. இதர காரணங்களும் உள்ளது. என்னென்ன இதர காரணங்கள் என்றால் உயில் மோசடியானது என குறிப்பிட்டு என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து உயில் எழுதிவைக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் பார்த்த உயிலில் பிராது சொத்துக்களும் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாதியும் மனுதாரர் கோகிலத்தம்மாளும் என்னை 16வது பிரதிவாதியாக சேர்த்து பழனி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வாழ்நாள் முழுவதும் எனக்கு எதிராகத்தான் வாதி செயல்பட்டு வந்தார் என்றும், அவருக்கு நான் எவ்வித பாதுகாப்பும், பராமரிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி அருள்மிகு தண்டாயுதபாணி

திருக்கோவிலில் காணியாளர் பதவியில் இருந்து வந்தார் என்றால் சரிதான். தற்போது வேலுச்சாமி கவுண்டர் இறந்தபின்பு என்னுடைய சித்தப்பா மங்களகவுண்டர் காணியாளராக பதவி வகிக்கிறார் என்றால் சரியல்ல. நான்தான் உள்ளேன். காணியாளர் பதவிவியில் செயல்பட எனக்கு விருப்பம் உண்டு என்றால், எனது பெரியப்பா வேலுச்சாமிக்கவுண்டர் எனக்கு அந்த பதவியை கொடுக்கும்படி தேவஸ்தானத்திற்கு கடிதம் கொடத்துள்ளார். அததனால் அது என் கடமை என பதவி வகிக்கிறேன். கோகிலத்தம்மாள் வீட்டுக்கு மூத்தவரான மங்களக்கவுண்டர்தான் காணியாளராக பதவி வகிக்கவேண்டும் என்று கூறியதால்தான் நான் கோகிலத்தம்மாளுக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேலுச்சாமிக்கவுண்டருக்கு குழந்தைகள் இல்லை என்று சொன்னால் சரிதான். அவருடைய சொத்துக்கு வேலுச்சாமிக்கவுண்டரின் சகோதரர் மகன் என்ற அடிப்படையில் நான் வாரிசு என்றால் சரிதான். இதுவரை வேலுச்சாமிக்கவுண்டருக்கு வாரிசு என கூறி நான் எவ்வித மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உயில் உண்மையானது என்பதால்தான் வேலுச்சாமிக் கவுண்டரின் சொத்துக்களுக்கு வாரிசு என்று நான் எவ்வித நடவடிக்கைவில்லை என்றால் சரியல்ல. உயிலைப்பற்றி எனக்கு தெரியாது. உயிலில் சொல்லப்பட்டுள்ள விபரங்களும், சொத்து விபரமும் எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கோகிலத்தம்மாளின் குடும்பத்தை கலங்கப்படுத்தி சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. நான் உயிலைப் பற்றி சொல்லியுள்ள சாட்சியம் பொய்யானது என்றால் சரியல்ல. எனக்கு மனுதாரர் குடும்பத்தின்மீது இருந்த கோபத்தினால் உண்மையான உயிலை மோசடியானது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு வேலுச்சாமிக்கவுண்டர் உயில் எழுதிவைத்ததால் சொத்துக்கள் எனக்கு கிடைக்காமல் போய்விட்டது என்பதால் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.